

தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி மேற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கரட்டுப்பட்டி சிவசாமி, கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அர்ச்சுனன் ஆகியோர் புதிதாக நியமனம் செய்ப்பட்டதையொட்டி தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ.,ஆண்டிபட்டி மகாராஜன் எம்.எல்.ஏ. ஆகியோரை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.உடன் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், துணை அமைப்பாளர்கள் சுகுமாரன். பிரபாகரன். அபுதாஹிர்.ராமகிருஷ்ணன், முருகன், ஸ்டீபன் ராஜ் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்!

# வனவிலங்குகளால் ஏற்படும் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பில் அமைச்சர் - முனைவர் க. பொன்முடி உறுதி !



சென்னை,ஏப்.6-

சட்டப்பேரவையில் வனத்தை யொட்டியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் வனவிலங்குகள் புகாத வாறு இரும்பு வட கம்பி வேலிகள் அமைக்க வேண்டியது குறித்து சிறப்பு கவன ஈர்ப்பு கொண்டு வந்து உறுப்பி னர்கள் இராமச்சந்திரன், கே. முனுசாமி பேசினர்.

இதற்கு பதிலளித்து அமைச்சர் - முனைவர் க.பொன்முடி பேசியதாவது:-

தமிழக முதலமைச்சர் அவர்கள், வன விலங்குகளும் பாதுகாக்கப்பட வேண்டும், அதே நேரத்தில் அவைகளினால் அப்பகுதியில் வாழ்கின்ற விவசாயிகளுக்கும், விளைநிலங்களுக்கும் ஆபத்து வரக்கூடாது என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவைகளெல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக இரும்புவட கம்பி வேலி, சூரிய சக்தியில் இயங்கும் இரும்பு வட கம்பி வேலி மற்றும் தொங்கும் வகையிலான சூரிய மின் வேலி போன்ற நவீன வகையிலான தடுப்பு வேலிகள் நிறுவப்பட்டு விளைநிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் யானைகளின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. அதையும்மீறி சில இடங்களில் வருகிறது, அதை நான் மறுக்கவில்லை. ஆனால், அதையும் தடுத்து நிறுத்துவதற்கு வன அதிகாரிகளுக்கு பயிற்சி கொடுப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, அதையும் செய்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக ஓசூரை பொறுத்தவரையில், அதைத்தான் அவர் கேட்டார்.

ஓசூர் வனக்கோட்டப் பகுதியில் ஏற்கெனவே 35.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு இரும்புவட கம்பி வேலியும், 18.2 கிலோமீட்டர் நீளத்திற்கு தொங்கும் வகையிலான சூரிய மின் வேலியும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன. அதுமட்டுமல்ல, தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி தென்கனிக்கோட்டை வனப் பகுதியில் ரூ.3.50 கோடி செலவில் இரும்பு கம்பி வட வேலிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்றும் வருகின்றன. அது தற்போது நடைபெறுகிறது.

அதுமட்டுமல்லாமல், 7 கி.மீ. நீளத்திற்கு தொங்கும் வகையிலான சூரிய மின்வேலியும் முதலமைச்சர் அவர்களினுடைய உத்தரவின் அடிப்படையிலே அமைக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள் இது போன்ற விபத்துகள் நடைபெறக்கூடாது என்ற அடிப்படையில் தான் கோயம்புத்தூர் மாவட்டத்திற்குகூட ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

அந்த அடிப்படையில் ரூ.5 கோடி செலவில் 10 கி.மீ. நீளத்திற்கு நவீன யானை பாதை, பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. யானைகள் வருவதைத் தடுப்பது போன்றே, தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படிதான், காட்டுப் பன்றிகள் வருவதை தடுப்பதற்காக, அவைகளை சுடுவதற்கான உத்தரவுகளையும் தமிழக அரசு த் ஆணை பிறப்பித்துள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அந்த அடிப்படையிலே யானைகளாக இருந்தாலும், மற்ற வன விலங்குகளாக இருந்தாலும், அவற்றின்மூலம் வருகிற பிரச்சினை களையெல்லாம் தடுப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டுதான் வருகிறோம். அதேபோன்று, நம்முடைய உறுப்பினர் அவர்கள் கேட்டது போன்று, வேப்பன ஹள்ளி ஊராட்சியில், பாரதிபுரம் கிராமத்தில் வன விலங்குகளால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்குத் தீர்வு காண அரசு முன்வருமா என்பது குறித்து கேட்டிருந்தார். அதற்கு நம்முடைய உறுப்பினர் மணி அவர்கள்கூட. கேள்வி எழுப்பி இருந்தார்

இருவருக்கும் சேர்த்து முழுமையான பதில் சொல்கிறேன். அந்த அடிப்படையில்தான், யானைகள் வருவதைத் தடுப்பதற்காக, யானைகளும் பாதுகாக்கப்பட வேண்டும், அதற்காகத்தான் மின்வேலிகளை அங்கே நாம் அமைத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் இன்னும் பல பகுதிகளிலே அந்தப் பிரச்சினைகள் இருந்தாலும், படிப்படியாக நிதி நிலைமைக்கேற்ப அவைகளை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், பெண்ணாகரம் தொகுதி, வேப்பனஹள்ளி ஊராட்சி, பாரதிபுரம் கிராமத்தில் வன விலங்குகளால் விவசாயி களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு 2023-2024 ஆம் ஆண்டில் மூன்ற மனுக்கள் பெறப்பட்டு, ரூபாய் 7 ஆயிரம் இழப்பீட்டுத் தொகை வழங்கப் பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், 2024-2025 ஆம் ஆண்டில் 18 மனுக்கள் பெறப்பட்டு ரூ.61,750 இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது மற்ற வேலைகளையும் நாங்கள் செய்து கொண்டு இருக்கிறோம் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மனிதர்கள் இறப்பு, நிரந்தர இயலாமைக்காக ரூ. 10 இலட்சம் வழங்கப்படுகின்றது. அதை அதிகமாக்க வேண்டுமென்று அவர் கோரிக்கை வைத்திருக்கின்றார். அதேபோன்று, வனத் துறையிலே பணியாற்றுகின்ற ஊழியர்கள் இறந்தாலும் 10 இலட்சம் ரூபாய்தான் கொடுக்கிறோம். அதையும் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கிறோம். அரசு ஊழியர்களுக்கெல்லாம் அவர்கள் பணியில் இருக்கிறபோது உயிர் நீத்தால் எவ்வளவு வழங்கப்படுமோ, அதேமாதிரி வனத் துறையில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கும் வழங்க வேண்டுமென்றும் கோரி இருக்கிறோம்.

ஆகவே, உறுப்பினர் அவர்கள் கோரியதைப் போல, நிதி நிலைமைக்கேற்ப விரைவிலே அதை உயர்த்தி கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும். கடுமையான காயங்களுக்கு 59 ஆயிரத்து 100 ரூபாயும், பயிர் சேதம் ஏற்பட்டால் ஓர் ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாயும், தென்னை மரம் ஒன்றிற்கு 500 ரூபாயும், முழுமையாக சேதம் அடைந்த வீட்டிற்கு 55 ஆயிரத்து 100 ரூபாயும், முழுமையாக சேதம் அடைந்த குடிசை வீட்டிற்கு 10 ஆயிரம் ரூபாயும், கறவை மாடு உயிரிழந்தால் 30 ஆயிரம் ரூபாயும், காளை மாட்டிற்கு 25 ஆயிரம் ரூபாயும், ஆடு, செம்மறி ஆட்டிற்கு 3 ஆயிரம் ரூபாயும், வளர்ப்பு பன்றிகளுக்கு 3 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டு வருகின்றது. அவைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு - அமைச்சர் முனைவர் க.பொன்முடி பதிலளித்தார்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–4 க்கு உட்பட்ட தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, ஈரோடு வடக்கு மற்றும் சேலம் கிழக்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 07.04.2025 திங்கட்கிழமை | மாலை 4.00 மணி | தருமபுரி கிழக்கு | கே.ஜே.பிளாசா, சேலம் பிரதான சாலை, தருமபுரி. |
| 08.04.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | தருமபுரி மேற்கு | என்.என்.மஹால், சேலம் புறவழிச் சாலை, அரூர், தருமபுரி. |
| 09.04.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் கிழக்கு | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல். |
| 10.04.2025 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் மேற்கு | கொங்கு சமுதாயக்கூடம், அண்ணா சிலை அருகில், திருச்செங்கோடு. |
| 10.04.2025 வியாழக்கிழமை | மாலை 4.00 மணி | ஈரோடு வடக்கு | இராமாயம்மாள் திருமண மண்டபம், கோபிச்செட்டிபாளையம். |
| 11.04.2025 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | சேலம் கிழக்கு | தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கழக அலுவலகம், வாழப்பாடி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 05-04-2025



### கடந்த 4 ஆண்டுகளில் REC லிமிடெட் நிறுவனம்

# பல தனியார் நிறுவனங்களுக்கு மறு நிதியளிப்பு கடன்களை வழங்கியுள்ளதா?

## மக்களவையில் வேலூர் எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஏப்.6-

மத்திய பொதுத்துறை நிறுவனமான REC லிமிடெட் மின் உற்பத்தி திட்டங்கள், மின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பிற உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக தனியார் லிமிடெட் நிறுவனங்களுக்கு ரக் லிமிடெட் வழங்கியுள்ள கடன் விவரம் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்றத் தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

**டி.எம்.கதிர் ஆனந்த்:** கடந்த நான்கு ஆண்டுகளில், REC லிமிடெட் நிறுவனம் கடன்களை வழங்கிய தனியார் லிமிடெட் நிறுவனங்களின் முழுமையான பட்டியலின் விவரங்கள்; ஆண்டு மற்றும் நிறுவனம் வாரியாக, தருக?

கடந்த மூன்று ஆண்டுகளில் REC லிமிடெட் பல தனியார் நிறுவனங்களுக்கு மறுநிதியளிப்பு (REFINANCE) கடன்களை வழங்கியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் திட்டங்களுக்கு மறுநிதியளிப்பு செய்வதற்காக வழங்கப்பட்ட மொத்த தொகை, நிறுவனம் வாரியாக தருக?

தமிழ்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட தனியார் லிமிடெட் நிறுவனங்களுக்கு REC லிமிடெட் இதுகாறும் ஏதேனும் கடன்களை வழங்கியுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?

பதில்: இதற்கு ஒன்றிய அரசின் மின்சக்தி அமைச்சகத்தின் ராஜாங்கஅமைச்சர்ஸ்ரீபாத்யசோநாயக் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

கடந்த நான்கு ஆண்டுகளில் REC லிமிடெட் நிதியளித்த தனியார் துறை திட்டங்களின் பட்டியல் இணைப்பு। இல் வைக்கப்பட்டுள்ளது.

அதன் படி 2022 முதல் 2025 பிப்ரவரி வரை நாட்டில் மின் உற்பத்தி, மின் கட்டுமான வசதிகளை மேம்படுத்தல், மின்உற்பத்தி சாரா திட்டங்கள் என 106 திட்டங்களை செயல்படுத்த தனியார் நிறுவனங்களுக்கு REC லிமிடெட் கடன் வழங்கியுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் REC லிமிடெட் மறுநிதியளிப்பு கடன் வழங்கிய தனியார் நிறுவனங்களின் பட்டியல் இணைப்பு|| இல் வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி கடந்த மூன்று ஆண்டுகளில் REC லிமிடெட் மறு நிதியளிப்பு வழங்கியுள்ள தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை 11 ஆகும்.

REC லிமிடெட் கடன் வழங்கிய தமிழ்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட தனியார் லிமிடெட் நிறுவனங்களின் பட்டியல் இணைப்பு||| இல் வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட 12 தனியார் லிமிடெட் நிறுவனங்களுக்கு REC லிமிடெட் கடன் வழங்கியுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

